**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056, ஸ்ரீவிசுவாவசு வருடம், புரட்டாசித்திங்கள் 07 ம் நாள்)

**I.A.No.2/2024**

**in**

**O.S.No.396/2015**

1. ராமாத்தாள் (இறந்துவிட்டார்)
2. கந்தசாமி
3. பழனிசாமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சாமியாத்தாள்
2. தண்டபாணி (இறந்துவிட்டார்)
3. சரஸ்வதி
4. வேலுசாமி
5. கண்ணாத்தாள்
6. முத்துலட்சுமி
7. பழனிசாமி
8. முருகேசன் (இறந்துவிட்டார்)

(Amended as per order in I.A.No.6/2025 dated on 12.09.2025) ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

9. பழனிசாமி கவுண்டர் ... எதிர்மனுதாரர்/புரபோஸ்ட் பார்ட்டி

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 20.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.பிரபாகரன், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 4, 7 எதிர்மனுதாரர்கள்/4, 7 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.C.ஈஸ்வரமூர்த்தி, B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1, 3, 5, 6, 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு

வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியான தண்டபாணி இறந்துவிட்டதால் அவரது வாரிசான பழனிசாமி கவுண்டரை அசல் வழக்கில் 9ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொள்ள தாக்கல் செய்ய வேண்டிய வாரிசு மனுவினை குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாமல் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 9ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

i) அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் மீது தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்து தற்போது விசாரணையில் இருந்து வருகிறது. இந்நிலையில் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியான தண்டபாணி என்பவர் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என 07.11.2024 வாய்தா தேதியன்று பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த குறிப்பாணையின் மூலம் தெரிய வந்தது. மேற்படி 2ம் எதிர்மனுதாரருக்கு 9ம் எதிர்மனுதாரர் மட்டுமே வாரிசு ஆவார். மேற்படி காலம்சென்ற 2ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் பிரதிவாதி என்பதால் அவரது வாரிசு சான்றிதழ் மனுதாரர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. ஆதலால் வாரிசு மனுவினை குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாததால் மனு அபேட்மெண்ட் ஆகிவிட்டது. எனவே 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியான தண்டபாணி

இறந்துவிட்டதால் அவரது வாரிசான பழனிசாமி கவுண்டரை அசல் வழக்கில் 9ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொள்ள தாக்கல் செய்ய வேண்டிய வாரிசு மனுவினை குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாமல் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**<u>2) 4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 7ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரைச் சுருக்கம்:–</u>**

i) மனுதாரர்கள் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கது அல்ல. இவ்வெதிர்மனுதாரர்கள் இவ்வெதிர் உரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகளைத் தவிர மனுவில் கண்ட மற்ற சங்கதிகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபிக்க வேண்டியது.

ii) எதிர்மனுதாரர்கள் தரப்பில் மெமோ தாக்கல் செய்யப்பட்டதன் பிறகு தான் 2ம் எதிர்மனுதாரரின் இறப்பு குறித்து தெரிய வந்ததாக கூறுவது மனுவில் கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல. இரத்த சம்பந்தப்பட்ட உறவுகளுக்கு எதிராக பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் எதிர்மனுதாரரின் இறப்பு குறித்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு நன்றாக தெரியும். 2ம் எதிர்மனுதாரரின் இறுதி சடங்கில் மனுதாரர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். 2ம் மனுதாரர் 4 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டதால் மேற்படியாரின் சட்டப்பூர்வ வாரிசுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் அசல் வழக்கில் கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாகும். அசல் வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்துடன் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படியாரின் வாரிசுகளை கட்சி சேர்ப்பதில் ஒவ்வொரு நாளும் ஏற்பட்ட காலதாமதத்தை மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டு சொல்ல வேண்டியது அவசியமாகும். எனவே

இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 4, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் 4, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்கள் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியான தண்டபாணி என்பவர் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என 07.11.2024 வாய்தா தேதியன்று பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்த குறிப்பாணையின் மூலம் தெரிய வந்தது என்றும் மேற்படி 2ம் எதிர்மனுதாரருக்கு 9ம் எதிர்மனுதாரர் மட்டுமே வாரிசு என்றும் எனவே 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசான பழனிசாமி கவுண்டரை அசல் வழக்கில் 9ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொள்ள தாக்கல் செய்ய வேண்டிய வாரிசு மனுவினை குறிப்பிட்ட காலத்தில் தாக்கல் செய்யாமல் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என்று சொல்லப்பட்டு 4, 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மெமோ தாக்கல் செய்யப்பட்டதன் பிறகு தான் 2ம் எதிர்மனுதாரரின் இறப்பு குறித்து தெரிய வந்ததாக கூறுவது மனுவில் கூறியுள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றும் மேற்படியாரின் வாரிசுகளை கட்சி சேர்ப்பதில் ஒவ்வொரு நாளும் ஏற்பட்ட காலதாமதத்தை மனுதாரர்கள் தரப்பில்

குறிப்பிட்டு சொல்ல வேண்டியது அவசியம் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களைப் பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் பரிகாரத்திற்காக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 20.06.2016 அன்று 4, 7 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாததால் 4, 7 பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டு, கடந்த 19.12.2019 அன்று 4, 7 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இ.ம.எண்.18/2020 மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 30.07.2021 அன்று மேற்படி மனு தள்ளுபடி செய்யட்டதால் மேற்படி உத்தரவை எதிர்த்து 4, 7 எதிர்மனுதாரர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP.No.2359/2021 in CMP.No.17889/2021–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அசல் வழக்கில் 4, 7 பிரதிவாதிகள் மீண்டும் கட்சி சேர்க்கப்பட்டு, 4, 7 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 28.08.2024 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, கடந்த 29.10.2024 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு, கடந்த 07.11.2024 அன்று 4, 7 பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதி கடந்த 17.01.2020 அன்று இறந்துவிட்டார் என்று குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டதன் பின்னிட்டு கடந்த 19.11.2024 அன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியான தண்டபாணி இறந்துவிட்டதால் அவரது வாரிசான பழனிசாமி கவுண்டரை அசல் வழக்கில் 9ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொள்ள தாக்கல் செய்ய வேண்டிய வாரிசு மனுவினை குறிப்பிட்ட

காலத்தில் தாக்கல் செய்யாமல் அபேட்மெண்ட் ஆனதை ரத்து செய்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் மேற்படி 2ம் எதிர்மனுதாரர் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்பது பிரதிவாதிகள் தாக்கல் செய்த குறிப்பாணையின் மூலம் தெரிய வந்தது என்றும் 2ம் எதிர்மனுதாரருக்கு 9ம் எதிர்மனுதாரர் மட்டுமே வாரிசு என்றும் சொல்லப்பட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படியாரின் வாரிசுகளை கட்சி சேர்ப்பதில் ஒவ்வொரு நாளும் ஏற்பட்ட காலதாமதத்தை மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்டு சொல்ல வேண்டியது அவசியம் என்றும் மறுக்கப்பட்டுள்ளது.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் 2ம் எதிர்மனுதாரரின் இறப்பு குறித்து மனுதாரர்கள்/வாதிகளுக்கு நன்றாக தெரியும் என்றும் 2ம் மனுதாரர் 4 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டதால் மேற்படியாரின் சட்டப்பூர்வ வாரிசுகளை குறிப்பிட்ட காலத்திற்குள் அசல் வழக்கில் கட்சி வேண்டியது அவசியம் என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது மனுதாரர்களால் தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனி சுவாதீனம் பரிகாரத்திற்காக எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டு மேற்படி 2ம் எதிர்மனுதாரர் கடந்த 17.01.2020 அன்று இறந்துவிட்டதாலும் மேற்படியாரின் வாரிசான 9ம் எதிர்மனுதாரரை அசல் வழக்கில் கட்சி சேர்த்துகொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியம் என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லியுள்ள சங்கதிகள் இந்நீதிமன்றத்தால் ஏற்கும்படியாக உள்ளதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும்

ஏற்படப்போவதில்லை என்பதாலும் உபயதரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும் உபய தரப்பினர்கள் உறவினர்கள் என்ற நிலையில் 9ம் எதிர்மனுதாரர்/புரபோஸ்ட் பார்ட்டியை அசல் வழக்கில் 9ம் பிரதிவாதியாக கட்சி சேர்த்துக்கொள்ள இம்மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்கள்/வாதிகள் கூட்டாகவும், தனித்தனியாகவும், 4, 7 எதிர்மனுதாரர்கள்/4, 7 பிரதிவாதிகளுக்கு ரூ.250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) செலவு தொகையாக வரும் 26.09.2025ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்கவேண்டும். மீண்டும் அழைக்க 26.09.2025.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.09.23 16:07:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : – இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :– இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2025.09.23 16:07:48 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.